## அல்லாஹ்வின் கட்டளை

إِنْ تُبْدُوا الصَّدَقَاتِ فَنِعِمَّا هِيَ ۖ وَإِنْ تُخْفُوهَا وَتُؤْتُوهَا الْفُقَرَاءَ فَهُوَ خَيْرٌ لَكُمْ ۚ وَيُكَفِّرُ عَنْكُمْ مِنْ سَيِّئَاتِكُمْ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ ○

நீங்கள் தருமங்களை வெளிப்படையாகச் செய்தால், அது(வும்) மிகச் சிறந்ததாகும். நீங்கள் அவற்றை மறைவாக ஏழைகளுக்கு வழங்கினால், அது உங்களுக்கு மிக்க நன்றேயாகும். (இதனால்) அவன் உங்களுடைய (பல) தீமைகளை உங்களை விட்டும் நீக்கி விடுவான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். (2:272)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

01 ஸஃபர் 1440 ஹிஜ்ரி கமரி 11 அஹா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

11 அக்டோபர் 2018


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்

**மஸீஹ் இப்னு மர்யம் பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது போன்றே என்னையும் சரியாக பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாத்தின் மஸீஹாக இறைவன் அனுப்பியுள்ளான். மேலும் எனக்காக தனது வல்லமையான அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான். வானத்தின் கீழ் எந்தவொரு பகைவனாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும், யூத கிறிஸ்தவராக இருந்தாலும் அல்லது வேறு எவராக இருந்தாலும் அவருக்கு அவற்றை எதிர்த்து நிற்கும் சக்தி கிடையாது. பலவீனமானவனும், இழிந்தவனுமான மனிதனால் இறைவனை எவ்வாறு எதிர்த்து நிற்க முடியும்? இது இறைவன் புறமிருந்து வந்த ஓர் அடிக்கல் ஆகும். எவன் இதனை உடைக்க நாடுகின்றானோ அவன் இதனை ஒருபோதும் உடைக்க முடியாது. ஆனால் இந்தக் கல் அவன் மீது விழும்போது அவனை அது துண்டு துண்டாக்கி விடும். ஏனெனில் இக்கல் இறைவனுடையதாகும். கையும் இறைவனுடையதாகும்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

சூரா ஃபாத்திஹாவின் மகத்தான நோக்கங்களில் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்னும் இந்த துஆவும் ஒன்றாகும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பைபிளின் புதிய ஏற்பாட்டின் பிரார்த்தனையில் அப்பம் கேட்கப்பட்டது போல் இந்த துஆவில் சென்று போன நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும் அருளப்பட்ட அனைத்து அருட்கொடைகளும் இறைவனிடம் கேட்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஒப்பீடு கவனிக்கத்தக்கதாகும். எவ்வாறு (ஈசா) மஸீஹுடைய பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டு கிறிஸ்தவர்களுக்கு அப்பத்திற்குரிய சாதனங்கள் பெருமளவில் கிடைத்தனவோ அவ்வாறே திருக்குர்ஆனிலுள்ள இப்பிரார்த்தனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு நற்செயல்கள் செய்பவர்களும், உத்தமமானவர்களுமான முஸ்லிம்கள் குறிப்பாக அவர்களில் முழுமையான நபர் இஸ்ரவேலரின் சந்ததிகளில் தோன்றிய நபிமார்களின் வாரிசாக ஆக்கப்பட்டுள்ளார்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்தச் சமுதாயத்திலிருந்து தோன்றியிருப்பதும் உண்மையில் இதே பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டதன் விளைவேயாகும். ஏனெனில் பெரும்பாலான நல்லடியார்கள் மறைவான நிலையில் இஸ்ரவேலரின் நபிமார்களது ஒப்புவமையில் பங்கு கொண்டவர்களாக இருந்த போதிலும் இந்தச் சமுதாயத்தில் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் முற்றிலும் இறைவனது கட்டளை மற்றும் அவனது அனுமதியின்படி இஸ்ரவேலரின் மஸீஹுக்கு ஒப்பாக நிறுத்தப்பட்டுள்ளார். ஏனெனில் மூஸாவின் சமுதாயத்திற்கும், முஹம்மதிய்ய சமுதாயத்திற்கும் இடையேயுள்ள ஒப்புவமை புரிவதற்காகவே ஆகும். இந்த நோக்கத்திற்காகவே இந்த மஸீஹ் எல்லா வகையிலும் இப்னு மர்யமோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளார். எதுவரையெனில், இஸ்ரவேல் சந்ததிகளில் தோன்றிய இப்னு மர்யமுக்கு வந்த சோதனைகளைப் போலவே இந்த இப்னு மர்யமுக்கும் சோதனைகள் வந்தன.

முதலாவதாக ஈஸப்னு மர்யம் இறைவனது ஊதுதலால் படைக்கப்பட்டது போலவே இந்த மஸீஹும் சூரா தஹ்ரீமின் வார்த்தைப்பாட்டிற்கு ஏற்ப இறைவனது ஊதுதலால் மர்யமிலிருந்து படைக்கப்பட்டுள்ளார். மேலும் ஈஸப்னு மர்யமின் பிறப்பின் மீது அதிகம் கூக்குரல் எழுந்ததைப் போலவே என் மீதும் பெரும் கூக்குரல் எழுந்தது. குருடர்களான பகைவர்கள் மர்யமை لَقَدْ جِئْتِ شَيْئًا فَرِيًّا (19:28) என்று கூறியது போலவே இவ்விடத்திலும் கூறப்பட்டது.

மேலும் பெரும் குழப்பம் விளைவிக்கப்பட்டது. எவ்வாறு இஸ்ரவேல் மர்யத்திற்கு பிரசவம் நடந்த போது இறைவன் பகைவர்களுக்கு ஈஸாவைப் பற்றி وَلِنَجْعَلَهُ آيَةً لِلنَّاسِ وَرَحْمَةً مِنَّا ۚ وَكَانَ أَمْرًا مَقْضِيًّا (19:22) என்ற மறுமொழியை அளித்தானோ அவ்வாறே என்னைப் பற்றியும், எனது உவமையான ஆன்மீக பிரசவத்தின் மீதும் அதே மறுமொழியையே விரோதிகளுக்கு பராஹீனே அஹ்மதிய்யாவில் அளித்துள்ளான்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் அருளால் இன்றிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் பெல்ஜியத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு நான் உங்களுடைய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றேன். இந்த இடைப்பட்ட காலத்தில் ஜமாஅத்தும் வளர்ந்துள்ளது. உலகின் பிற ஜமாஅத்துகளைப் போன்று அல்லாஹ்வின் அருளால் இங்குள்ள ஜமாஅத்தும் வளர்ந்துள்ளது**

---

**இது தவிர வேறு நிறைய விஷயங்களிலும் இங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, மிஷன் ஹவுஸ்களும் அதிகரித்துள்ளன. பள்ளிவாயில்கள் மற்றும் தொழுகை சென்டர்களும் அதிகரித்துள்ளன. பிரஸ்ஸல்ஸின் (Brussels–ன்) பள்ளிவாசல் கட்டும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. அதுவும் ஒரு சிறந்த பள்ளிவாயிலாக உருவாகிக் கொண்டிருக்கிறது. நேற்றைக்கு முந்தைய தினம் ஹால்கனில் ஒரு பள்ளிவாயிலைத் திறந்து வைத்தேன். மிக பரந்த இடமும் கட்டடமும் அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். வெளிப்படையாகப் பார்க்கும்போது இங்கு ஜமாஅத்தின் மீது பெரும் அருள் ஏற்பட்டுள்ளது. ஆனால் அல்லாஹ்வினுடைய இந்த அருள் ஜமாஅத் மக்களிடம் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளைப் புரிந்தவாறு அதை ஏற்பதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் வெளிப்படையாக மட்டுமின்றி மாறாக உண்மையாகவே முன்பை விடச் சிறந்ததாக ஆக வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்**

---

**ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடிய ஒவ்வொருவரும் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராக ஆக வேண்டும் என்ற நோக்கத்தை எப்போதும் முன்னிருத்த வேண்டும். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். உலகத்தில் இருந்து கொண்டு உலகை மார்க்கத்திற்குச் சேவை செய்யக்கூடியதாக ஆக்க வேண்டும். இந்த ஆன்மாவை உங்களிடத்தில் மட்டும் உருவாக்காமல் உங்களது குழந்தைகளிடத்திலும் இந்த ஆன்மாவை ஊத வேண்டும். அதாவது அல்லாஹ் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றான்? மனித வாழ்வின் நோக்கம் என்ன? என்பதை உணர்த்த வேண்டும். தலைமுறை தலைமுறையாக தமது சந்ததிகளின் உள்ளத்தில் உலகை மார்க்கத்திற்குச் சேவை செய்வதற்காக ஆக்குவதற்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதைப் பதிய வைக்க வேண்டும். மேலும் இந்த இறுதி காலத்தில் நமது சீர்திருத்தத்திற்காக நம் மீது அருள் செய்தவாறு அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை அனுப்பி இருக்கின்றான். அவரிடம் பைஅத் செய்து அவரின் கூற்றுகளுக்கிணங்க செயல்படுபவர்களாக ஆக வேண்டும். அதில்தான் நமது வாழ்வு உள்ளது. நமது தலைமுறையின் வாழ்வும் உள்ளது**

---

**பாகிஸ்தானில் ஆண்டு மாநாடு நடத்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் அங்குள்ள மக்கள் இழப்பிற்குரியவர்களாக இருக்கின்ற வேளையில் M.T.A ல் குறைந்த பட்சம் தொடர்ந்து குத்பாக்களை கேளுங்கள்; பாருங்கள். ஆண்டு மாநாட்டை பாருங்கள். பிறகு அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். இதுவும் அல்லாஹ் திறந்து கொடுத்துள்ள ஒரு வழியாகும். ஓரளவுக்கு இதன் மூலம் இழப்பைக் குறைத்துக் கொள்ளலாம். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை M.T.A ல் பார்த்தும் கேட்டும் அதிலிருந்து பயனடைவதற்கு முயற்சி செய்தால் 60,70 சதவீதம் இழப்பு குறையும். விரும்பினால் 100 சதவிகிதம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்**

---

**ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஆண்டு மாநாட்டின் குறிக்கோள் மற்றும் நோக்கம் தொடர்பான குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **பெல்ஜியத்திலுள்ள Dilbeek ல் 14 செப்டம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ்வின் அருளால் இன்றிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் பெல்ஜியத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு நான் உங்களுடைய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றேன். இந்த இடைப்பட்ட காலத்தில் ஜமாஅத்தும் வளர்ந்துள்ளது. உலகின் பிற ஜமாஅத்துகளைப் போன்று அல்லாஹ்வின் அருளால் இங்குள்ள ஜமாஅத்தும் வளர்ந்துள்ளது. பாகிஸ்தானிலிந்து ஹிஜ்ரத் செய்து வரக்கூடியவர்களில் பெரும்பாலார் புதிதாக கலந்து கொண்டுள்ளனர்.

இது தவிர வேறு நிறைய விஷயங்களிலும் இங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, மிஷன் ஹவுஸ்களும் அதிகரித்துள்ளன. பள்ளிவாயில்கள் மற்றும் தொழுகை சென்டர்களும் அதிகரித்துள்ளன. பிரஸ்ஸல்ஸின் **(Brussels–ன்)** பள்ளிவாசல் கட்டும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. அதுவும் ஒரு சிறந்த பள்ளிவாயிலாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

நேற்றைக்கு முந்தைய தினம் ஹால்கனில் ஒரு பள்ளிவாயிலை திறந்து வைத்தேன். மிக பரந்த இடமும் கட்டடமும் அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். வெளிப்படையாகப் பார்க்கும்போது இங்கு ஜமாஅத்தின் மீது பெரும் அருள் ஏற்பட்டுள்ளது. ஆனால் அல்லாஹ்வினுடைய இந்த அருள் ஜமாஅத் மக்களிடம் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளைப் புரிந்தவாறு அதை ஏற்பதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் வெளிப்படையாக மட்டுமின்றி மாறாக உண்மையாகவே முன்பை விடச் சிறந்ததாக ஆக வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேலும் அது மட்டுமின்றி ஓரிடத்தில் நின்று விடாமல் ஒவ்வொரு நாளும், ஒவ்வோர் அடியும் கடந்த நாளை விடவும், கடந்த அடியை விடவும் நன்மை மற்றும் இறையச்சம் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் முன்னேறியதாகவும் தென்பட வேண்டும். நமது தீமைகளை நாம் புறந்தள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் நன்மைகளில் புதிய இலக்குகளை அடையக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்த விஷயம் ஜமாஅத் மக்களிடம் தென்படும் என்றால் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய வருகையின் நோக்கத்தை அடைந்து விட்டோம் அல்லது அடைவதற்கு முயற்சி செய்கின்றோம் என்று கூற முடியும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறோம் என்று கூற முடியும்.

எனவே இந்த விஷயத்தைப் புரிந்தவாறு எப்போதும் நம்மை ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. குறிப்பாக இந்த முன்னேற்றமடைந்த மற்றும் சுதந்திரம் என்ற பெயரில் மார்க்க கட்டுப்பாடுகளிலிருந்தும், அல்லாஹ்வின் கட்டளைகளிலிருந்தும் சுதந்திரமான நாடுகளில் எங்கு மார்க்கக் கட்டளைகளை பின்பற்ற வேண்டும் என்பது பொருட்படுத்தப்படுவதில்லையோ அல்லது அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேண வேண்டும் என்பது பொருட்படுத்தப்படுவதில்லையோ இது போன்ற நாடுகளில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டியதும், முயற்சி செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

இல்லையென்றால் மார்க்கத்தின் பெயரில் இங்கு வந்து பிறகு அல்லாஹ்வின் விஷயங்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்காமல் இருப்பது உலகில் வீழ்ந்து விடுவது அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்கி விடும். இங்கு வருபவர்களில் பெரும்பாலார் மார்க்கத்தின் பெயரில் வந்துள்ளனர். உங்களுக்கு உங்களது நாடுகளில் தமது மார்க்கத்தின்படி செயல்படுவதற்கான சுதந்திரம் இல்லாததனால் இங்கு வந்துள்ளீர்கள்.

எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். இல்லையென்றால் நினைவில் கொள்ளுங்கள். மார்க்கத்தின் பெயரால் வந்துள்ளீர்கள். அல்லாஹ்வின் பெயரால் வந்துள்ளீர்கள். அவ்வாறிருக்க அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படாவிட்டால் இந்த விஷயங்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்கி விட முடியும். ஆனால் மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றான். இந்த பலவீனத்தின் காரணமாக உலகத்தின் பக்கம் சாய்தலும் ஏற்பட்டு விடுகிறது. ஓரளவிற்கு உலகத்தின் பக்கம் கவனம் செலுத்துவதும், உலகைச் சம்பாதிப்பதும் பாவமல்ல. ஆனால் உலகின் மீது உலகவாதிகளைப் போன்று வீழ்வதிலிருந்து அல்லாஹ் தடுத்திருக்கின்றான். மேலும் இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூட நமக்கு மிக விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இறைவன் உலகப் பணிகளை ஆகுமானதாக்கி இருக்கின்றான். உலகத்தின் வேலைகளும், ஈடுபாடுகளும் ஆகுமானதுதான். அது பாவமும் இல்லை. ஏனென்றால் இது இல்லையென்றால் அந்த பாதையிலும் சோதனைகள் வந்து விடுகின்றது. மேலும் அந்த சோதனைகளின் காரணத்தால் மனிதன் திருடனாகவும், கொள்ளையடிப்பவனாகவும் ஆகி விடுகின்றான். மேலும் பலவிதமான தீய பழக்கங்களுக்கு ஆளாகி விடுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஒவ்வொரு பொருளுக்கென்றும் ஒரு வரம்பு உள்ளது. மார்க்கத்தின் பாதையில் உங்களுக்கு உதவிக்கான ஏற்பாட்டை செய்யும் வரம்புக்குள் உலக ஈடுபாடுகளை மேற்கொள்ளுங்கள். மேலும் அதில் பிரதான நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நாமும் உலக ஈடுபாட்டிலிருந்து தடுப்பதில்லை. உலக பணிகள் தடுக்கப்பட்டவையல்ல. ஆனால் முக்கியமான நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

எனவே இந்த அடிப்படையான விஷயத்தை ஒரு மார்க்கவாதி மற்றும் தன்னை அல்லாஹ்வின் மார்க்கத்தின்படி நடக்கக் கூடியவர் என்று கூறுபவர் பின்பற்ற வேண்டும். உலகத்தைச் சம்பாதியுங்கள். வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். தமது மனைவி மக்களின் செலவீனங்களுக்காகவும், வீட்டினுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வழங்குங்கள். இது உங்களின் கடமையாகும்.

இதற்கு உலகத் தொழில் செய்வது, பணி செய்வது அவசியமாகும். ஆனால் இந்த பணி, வியாபாரம், தொழில் உங்களை மார்க்கம் பற்றிய கவலையே இல்லாத அளவிற்கு பணம் சம்பாதிப்பதில் உங்களை மூழ்கடித்து விடக்கூடாது. உலகத்தைச் சுற்றியே உங்களுடைய சிந்தனைகள் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது.

உலகத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்றாலும் கூட அது அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க மனைவி மற்றும் குழந்தைகளின் உரிமைகளை நிறைவேற்றுவதற்காகவும், அல்லாஹ்வின் படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்றுவதற்காகவும், அல்லாஹ்வின் மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதற்காகவும் ஆகும். இந்த நோக்கம் இருக்குமென்றால் உலகமும் கிடைக்கும்; மார்க்கமும் கிடைக்கும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள்:

அதாவது இரவு பகலாக அல்லாஹ் என்கின்ற அம்சத்தின் இடத்தை உலகம் நிரப்பும் அளவிற்கு உலக விவகாரங்களில் மூழ்கிக் கிடக்கவும் கூடாது. அல்லாஹ்வுக்கு வழங்க வேண்டிய உரிமைகளையும், உலக விவகாரங்களில் மூழ்கி வழங்காமல் கடந்து சென்று விடக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அப்படி எவரேனும் செய்வார் என்றால் அவர் தமக்குத்தாமே இழப்பிற்கான ஏற்பாட்டைச் செய்கின்றார். அவரின் நாவில் வெறும் வாதம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 73 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே உலகில் மூழ்கி விட்டால் மார்க்கத்திலிருந்து இழப்பிற்குரியவராகி விடுகின்றீர்கள். மார்க்கத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகிவிட்டால் பிறகு மார்க்கத்தின் வாதமும், பைஅத் செய்திருப்பதாக வாதிப்பதும், அல்லாஹ்வின் மீது ஈமான் இருப்பதாக வாதிப்பதும் வெறும் வாதமாக மட்டுமே இருக்கும். அதை விட அதிகமாக அதற்கு எம்மதிப்பும் இல்லை. அதற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை. கூறுவதற்கு நாம் அஹ்மதிகள். ஆனால் நாம் உலகின் பக்கம் முன்னேறினால், அதில் மூழ்கினால் நமது செயல்களும் பிறரது செயல்களைப் போன்றே இருக்கும்.

பிறகு இந்த விஷயத்தை இன்னோரிடத்தில் மேலும் விளக்கியவாறு அதாவது உலகத்தை அடைவதன் நோக்கமும் கூட மார்க்கத்திற்காக இருக்க வேண்டும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாம் துறவறத்தைத் தடை செய்துள்ளது. இது கோழைகளின் பணியாகும். உலகை விட்டுத் துண்டித்திருப்பது என்பது தைரியமற்றவர்களின் பணியாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நம்பிக்கையாளருக்கு உலகோடு இருக்க வேண்டிய தொடர்புகள் எந்த அளவுக்கு பரந்ததாக இருக்குமோ அந்த அளவுக்கு அவர்களது அந்தஸ்து உயர்வதற்குக் காரணமாக இருக்கும். ஏனென்றால் அதன் குறிக்கோள் மார்க்கமாக இருக்கின்றது. உலகமும் அதன் செல்வமும் மார்க்கத்திற்குச் சேவை செய்பவையாக இருக்கின்றன. அதாவது உலகமும், உலகத்திலுள்ள மதிப்பும், மரியாதையும், செல்வமும் ஒரு நம்பிக்கையாளருக்கு உலக வாதத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணிகளாக இருப்பதில்லை.

மாறாக, இந்த அனைத்தும் மார்க்கத்தின் தொண்டர்களாக பணி செய்கின்றன. அவரின் அந்தஸ்தும் மதிப்பும் மார்க்கத்திற்குப் பலனளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. அவரின் செல்வமும் மார்க்கத்திற்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

உலகத்தின் செல்வம் என்று அன்னார் கூறியிருப்பதன் பொருள் என்னவென்றால், செல்வம் ஒரு வாகனம் ஆகும். அது எப்படிப்பட்ட வாகனம் என்றால், மனிதன் அதில் அமர்ந்து மார்க்கத்தின் உயர் இலக்குகள் வரை சென்றடைய வேண்டியதுள்ளது. மனிதன் தன்னுடைய பயணத்தின் வசதிக்காக எடுத்துக் கொள்ளும் பயணத்திற்குத் தேவையான பொருளும் நல்ல வாகனமும் எளிதாக இலக்கை அடைய வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்கின்றான்.

இதே போல் உலகை அடைந்து அதிலிருந்து பலன் பெறுங்கள். மேலும் அதை மார்க்கத்தின் சேவகராக ஆக்குங்கள். இவ்வாறல்லாமல் தானே உலகத்தின் சேவகராக ஆகி மார்க்கத்தை விட்டு விடுவதாக இருக்கக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் துஆ மூலம் போதித்திருக்கின்ற ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தவ் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் என்ற போதனையிலும் உலகை முன்னால் வைத்திருக்கின்றான். ஆனால் அது என்ன உலகம்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஹஸனத்துத் துன்யாவை அதாவது உலகின் நன்மைகளை முதலில் வைத்துள்ளான். அவை மறுமையின் நன்மைகளுக்கு காரணிகளாக அமைகின்றன. இந்த துஆவின் போதனையிலிருந்து தெளிவாகத் தெரிய வருவது என்னவென்றால், ஒரு நம்பிக்கையாளர் உலகை அடைவதில் மறுமையின் நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு உலகத்தின் நன்மைகள் என்ற சொல்லில் ஒரு நம்பிக்கையாளரான முஸ்லிம் உலகை அடைவதற்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து சிறந்த வழிமுறைகளும் கூறப்பட்டிருக்கின்றது.

நன்மை மற்றும் சிறப்பு இருக்கின்ற அனைத்து வழிமுறைகளின் மூலமாகவும் உலகை அடையுங்கள். அந்த வழிமுறைகள் பிற மனிதரைக் கஷ்டத்திற்குள்ளாக்கக் காரணியாக இருக்கக் கூடாது. மேலும் ஒரே இனத்தில் ஏதேனும் வெட்கப்படுவதற்குக் காரணியாகவும் இருக்கக்கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 91,92 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அப்படிப்பட்ட உலகம் சந்தேகமின்றி மறுமையின் நன்மைக்குக் காரணியாக அமையும். இப்படிப்பட்ட உலகைச் சம்பாதிப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அது மறுமையின் நன்மைகளுக்குக் காரணியாக இருக்க வேண்டும். இங்கு இருக்கக் கூடிய பொலிவுகளில் மூழ்கி தமது நோக்கத்தையே மறந்து போகின்ற அளவுக்கு இருக்கக் கூடாது. மறுமையில் நன்மையைப் பெறுவதற்குப் பதிலாக அல்லாஹ்வின் கோபத்திற்குக் காரணியாக ஆகி விடக்கூடாது.

பிறகு உலகப் பொலிவுகள் மற்றும் இன்பங்கள் எப்படிப்பட்டதென்றால் மனிதனிடத்தில் நிம்மதியின்மையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. உலகத்தில் எனக்கு நிம்மதி கிடைக்கும் என்று மனிதன் நினைக்கலாம். ஆனால் உண்மையில் நிம்மதி இல்லை. மாறாக, நிம்மதியின்மையே உருவாகின்றது.

இதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வெளிப்படையான செல்வமோ அல்லது ஆட்சி அதிகாரமோ, செல்வமோ, கண்ணியமோ அல்லது அதிக சந்ததிகளோ எந்த மனிதரின் நிம்மதிக்கும் காரணியாக இருக்காது என்பதை கருத்தில் கொள்ளுங்கள். மேலும் இவை சுவர்க்கமாகும் என்று எண்ணி விட வேண்டாம். அவருக்குச் சுவர்க்கம் கிடைத்து விட்டது என்றும் எண்ணி விட வேண்டாம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஒருபோதும் அவ்வாறில்லை. உண்மையிலேயே நிம்மதி இருக்கின்ற சுவர்க்கத்தின் அருள்கள் இந்த விஷயங்களால் கிடைப்பதில்லை. அது இறைவனுக்காக வாழ்வதிலும் மரணிப்பதிலும்தான் கிடைக்க முடியும். அதற்காக நபிமார்கள் குறிப்பாக இப்ராஹீம் மற்றும் யாகூப் (அலை) ஆகியவர்களது அறிவுரை என்னவாக இருந்ததென்றால், ஃபலா தமூதுன்ன இல்லா வ அன்தும் முஸ்லிமூன் அதாவது கட்டுப்படக்கூடிய நிலைமையிலன்றி ஒருபோதும் மரணிக்க வேண்டாம்.

இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் எப்போதும் இறைவனுக்கு கட்டுப்படக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டும். மரணித்திற்கென்று ஏதேனும் நேரம் விதிக்கப்படவில்லை. மரணம் வரும்பொழுது நீங்கள் கட்டுப்படுதலுக்கு வெளியில் இருந்து விடக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

உலகத்தின் இன்பங்கள் ஒரு வகையான தூய்மையற்ற ஆசைகளை உருவாக்கி தாகத்தை அதிகரித்து விடுகின்றன. தாகமுடைய நோயாளியைப் போன்று அவருக்கு தாகம்

அடங்குவதில்லை. தண்ணீர் குடித்துக் கொண்டே இருக்கக்கூடிய நோயாளிக்குத் தாகம் அடங்குவதில்லை. அவர் பருகிக் கொண்டே செல்கின்றார். எதுவரை என்றால் அவர் அழிந்து விடுகின்றார். இந்த பொருத்தமற்ற ஆசைகளும், ஏக்கங்களும் கூட அந்த நரகத்தின் நெருப்பாகும். அது மனிதனின் உள்ளத்திற்கு நிம்மதியை வழங்குவதில்லை.

மாறாக, அவனுக்கு ஒரு நிம்மதியற்ற நிலைமையை ஏற்படுத்துகிறது. எனவே மனிதன் செல்வம் அல்லது குழந்தைகளின் நேசத்தின் உணர்ச்சியிலும், மயக்கத்திலும் அவனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு திரை உருவாகி விடும் அளவிற்கு பைத்தியமாக ஆகிவிடக் கூடாது என்ற விஷயம் எனது நண்பர்களின் பார்வையில் ஒருபோதும் மறைவானதாக இருக்கக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 101,102 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அதாவது உலகம் மற்றும் அதில் உள்ளவற்றில் தேவைக்கு அதிகமாக ஈடுபாடு காட்டுவதும், மூழ்குவதும் எப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தி விடுகின்றதென்றால் அல்லாஹ்வுக்கும் அவனுக்கும் இடையே ஒரு திரை ஏற்பட்டு விடுகின்றது. ஒரு தடை ஏற்படுகின்றது. மறைப்பு நடுவே வந்து விடுகின்றது. அடியான் இறைவன் பக்கம் செல்வதுமில்லை. இறைவன் அடியானின் பக்கம் வருவதுமில்லை. அடியான் முதலில் என் பக்கம் வருவதற்கு முயற்சிப்பான் என்றால் நானும் அவன் பக்கம் வருவேன் என்றுதான் அல்லாஹ் கூறுகின்றான்.

ஹதீஸிலும் கூட இவ்வாறுதான் வந்துள்ளது. அதாவது அடியான் ஓர் அடி வந்தால் நான் இரண்டு அடி வருவேன். அவன் நடந்து வந்தால் நான் ஓடி வருவேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தவ்ஹீது ஹதீஸ் எண் 7405)

எனவே இந்தத் திரையையும், தடையையும் நீக்க வேண்டுமென்றால் உலகை மார்க்கத்தின் அடிமையாக்கித்தான் நீக்க முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இதனால்தான் செல்வம் மற்றும் குழந்தைகள் சோதனையாகும் என்று கூறப்பட்டுள்ளது. அவை அடியாருக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு தடையை ஏற்படுத்தி விடுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அவற்றின் மூலமாக அதாவது செல்வம் மற்றும் குழந்தைகளின் மூலமாக மனிதனுக்கு ஒரு நரகம் ஆயத்தம் ஆகிறது. அவற்றை விட்டு அவன் பிரிக்கப்படும் பொழுது அவன் அதிக நிம்மதியின்மையையும் அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இரு பொருட்களுக்கிடையே தொடர்பு ஏற்படும் பொழுதும் உரசும் பொழுதும் வெப்பம் உருவாகிறது. கைகளை உரசினாலும் கூட அதிலிருந்தும் வெப்பம் உருவாகிறது. கல்லை உரசினாலும் அதிலிருந்து வெப்பம் ஏற்படுகிறது. இதே போன்று மனிதனின் அன்பும், உலகம் மற்றும் உலகின் அன்பும் உரசுவதனால் ஏற்படுகின்ற வெப்பத்தில் இறைவன் மீதுள்ள அன்பு எரிந்து நாசமாகிறது. அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு பிறகு முடிந்து விடுகிறது.

மனிதனின் அன்பும் உலகத்தின் அன்பும் பரஸ்பரம் உரசினால் பிறகு அதன் விளைவாக அல்லாஹ்வின் மீதான அன்பு முற்றுப் பெற்று விடும். எரிந்து விடும். மேலும் உள்ளம் இருள் அடைந்து இறைவனை விட்டு தூரம் சென்று விடுகின்றது. மேலும் எல்லா வகையான வீணானவற்றிற்கும் ஆளாகி விடுகின்றான். ஆனால் உலகப் பொருட்களோடு இருக்கின்ற தொடர்பு இறைவனில் மூழ்கியிருக்கும் என்றால் பிறகு அல்லாஹ் ஓரளவுக்கு அந்த அன்பை ஆகுமானதாக ஆக்கியிருக்கின்றான்.

இறைவனுடைய அன்பில் மூழ்கிய அன்பாக இருக்குமென்றால் அப்போது பரஸ்பரம் ஏற்படும் உரசலினால் அல்லாஹ் அல்லாதவற்றின் மீதிருக்கின்ற அன்பு எரிந்து முடிந்து விடுகின்றது. அந்த உரசல் ஏற்படும் பொழுது அந்த இடத்தில் ஒரு வெளிச்சமும் ஒளியும் நிரம்பி விடுகின்றது. பிறகு இறைவனின் விருப்பம் அவனது விருப்பமாகவும், அவனது விருப்பம் இறைவனது விருப்பமாகவும் ஆகிவிடுகின்றது. பிறகு அடியான் இறைவன் விரும்புகின்றவற்றில் தானும் திருப்தி கொள்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இதற்கு எதிராக அவனிடத்தில் இருக்கும் அனைத்தும் நரகமாகும். ஆக, இறைவன் இல்லாமல் வாழ்க்கையை கழிப்பதும் நரகமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 102,103 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் முழுமையான முறையில் முஸ்லிமாகி விட வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றான். முஸ்லிம் என்ற வார்த்தை உணர்த்துவது என்னவென்றால் முற்றிலுமாகத் துண்டித்துக் கொள்ளுதல் ஆகும். அதாவது முழுமையான முறையில் இறைவன் பக்கம் குனிந்து விட வேண்டும். இப்போது இறைவன் பக்கம் குனிந்து விட்டோம். பிறகு ஏதேனும் ஒரு சமயத்தில் உலகப் பயன்களை பார்க்கும் போது உலகத்தின் பக்கம் குனிந்தோம் என்றால் இறைவனை மறந்து விட்டால் அது இதற்கு நேர்மாற்றமானதாக இருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் முஸ்லிம்களை முஸ்லிமாக படைத்து அளவற்ற அருள் புரிந்துள்ளான். நிபந்தனை என்னவென்றால், அவர் சிந்திக்க வேண்டும். புரிய வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 304 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நான் ஏற்கனவே கூறியது போன்று மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றான். சில வேளைகளில் உலகத்தின் மீதுள்ள ஆர்வம் அவனைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றது. மனிதன் உலகின் பக்கம் அதிகமாகச் சாய்ந்து விடுகின்றான். அல்லாஹ் மற்றும் அவனது மார்க்கத்திலிருந்து கவனமற்றவனாக ஆகிவிடுகின்றான். அல்லது சில செயல்களில் பலவீனங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

அல்லாஹ்வின் அனைத்துக் கட்டளைகளையும் மனிதன் முழுமையாக முன் வைப்பதில்லை. உரிமைகளை வழங்குவதில்லை. மனைவிக்குரிய உரிமையை வழங்குவதில்லை. குழந்தைகளுக்குரிய உரிமையை வழங்குவதில்லை. குடும்பப் பிரச்சனைகளை உருவாக்கி விடுகின்றான். வீடுகளில் சண்டைகள் உள்ளன. அல்லது தங்களது வியாபாரத்தில் நேர்மையாக நடந்து கொள்வதில்லை. அல்லது வியாபாரத்தின் காரணமாக தொழுகையை விட்டு விடுகின்றனர்.

இது போன்ற பலவீனங்களிலிருந்து மனிதனை வெளியில் எடுப்பதற்கு அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நற்பேற்றை

நமக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். நாம் வழிதடுமாறுவதிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு சந்தர்ப்பத்தில் வழிகாட்டுகின்றார்கள்.

பிறகு அன்னார் இறைவனுடைய கட்டளையினால் இந்த ஏற்பாட்டையும் செய்திருக்கின்றார்கள். அதாவது ஆண்டு மாநாட்டை துவக்கினார்கள். வருடத்தில் ஒரு முறை நாம் ஒன்றிணைந்து நமது ஆன்மீகத்தை முன்னேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்வற்கு முயற்சி செய்கின்றோம்.

எனவே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடிய ஒவ்வொருவரும் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராக ஆக வேண்டும் என்ற நோக்கத்தை எப்போதும் முன்னிருத்த வேண்டும். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். உலகத்தில் இருந்து கொண்டு உலகை மார்க்கத்திற்குச் சேவை செய்யக்கூடியதாக ஆக்க வேண்டும். இந்த ஆன்மாவை உங்களிடத்தில் மட்டும் உருவாக்காமல் உங்களது குழந்தைகளிடத்திலும் இந்த ஆன்மாவை ஊத வேண்டும்.

அதாவது அல்லாஹ் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றான்? மனித வாழ்வின் நோக்கம் என்ன? என்பதை உணர்த்த வேண்டும். தலைமுறை தலைமுறையாக நமது சந்ததிகளின் உள்ளத்தில் உலகை மார்க்கத்திற்குச் சேவை செய்வதற்காக ஆக்குவதற்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதைப் பதிய வைக்க வேண்டும்.

மேலும் இந்த இறுதி காலத்தில் நமது சீர்திருத்தத்திற்காக நம் மீது அருள் செய்தவாறு அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை அனுப்பி இருக்கின்றான். அவரிடம் பைஅத் செய்து அவரின் கூற்றுகளுக்கிணங்க செயல்படுபவர்களாக ஆக வேண்டும். அதில்தான் நமது வாழ்வு உள்ளது. நமது தலைமுறையின் வாழ்வும் உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அனைத்து கலப்பற்றவர்களுக்கும், இந்த இயக்கத்தின் பைஅத்தில் இணைந்திருக்கக் கூடியவர்களும் தெளிவாவது என்னவென்றால், பைஅத் செய்வதன் நோக்கம், உலகத்தின் மீதான அன்பு தணிந்து விட வேண்டும். மேலும் தனது இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதான அன்பு மேலோங்க வேண்டும். மேலும் எப்படிப்பட்டதொரு நிலை உருவாக வேண்டுமென்றால் அதன் மூலம் மறுமையின் பயணம் வெறுக்கத்தக்கதாகத் தெரியக் கூடாது என்பதே பைஅத் செய்வதன் நோக்கமாகும்.

(ஆஸ்மானி ஃபைஸிலா, ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 351)

எனவே எதுவரை அல்லாஹ் மற்றும் அவனது தூதரோடு முழுமையான அன்பு இருக்காதோ அதுவரை உலகத்தின் மீதான அன்பிலும் குறைவு ஏற்பட முடியாது. மேலும் மனிதன் மரணிக்கின்ற தருவாயில் நிம்மதியும் கிடைக்காது. மரணிக்கின்ற நேரத்தில் இருக்கும் நிம்மதியின்மை நீங்கவும் முடியாது.

இந்த நோக்கத்திற்காகத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இந்த இயக்கத்தை அல்லாஹ் நிறுவியுள்ளான். மேலும் நமக்கு அதில் இணையும் நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அதற்காகத்தான் அன்னார் பைஅத்தும் வாங்கியுள்ளார்கள். பைஅத் செய்பவர்களுக்கு இந்த நோக்கத்தை தெளிவுபடுத்தியும் உள்ளார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சி செய்யவில்லை என்றால் பிறகு நாம் பைஅத் செய்ததன் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க மாட்டோம்.

ஆரம்பத்தில் ஆண்டு மாநாடு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மக்கள் ஆண்டு மாநாட்டின் நோக்கங்களை நிறைவேற்றுவதில்லை என்பதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிந்தபோது அன்னார் மிகவும் கோபத்தை வெளிப்படுத்தியவாறு இந்த ஆண்டு ஆண்டு மாநாடு நடக்காது என்று அறிவிப்புச் செய்தார்கள். அந்த ஆண்டு மாநாடு நடக்கவும் இல்லை. ஆண்டு மாநாடு தள்ளி வைக்கப்படுவதாக அன்னார் செய்த அறிவிப்பு இன்றும் கூட ஒவ்வொரு பற்றுள்ளவரையும் நிம்மதியிழக்கச் செய்யக் கூடியதாக இருக்கிறது; இருக்கவும் வேண்டும்.

நமது ஜமாஅத்தின் மக்கள் எப்படியாவது மீண்டும் மீண்டும் சந்திப்பின் மூலமாக அவர்களின் உள்ளங்கள் மறுமையின் பக்கம் குனிந்து விடும் அளவிற்கும் அவர்களிடத்தில் இறையச்சம் ஏற்பட்டு விடும் அளவிற்கும் தன்னகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்த ஆண்டு மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

தூய்மையும் இறையச்சம், மென்மையான உள்ளம், பரஸ்பர சகோதரத்துவம் ஆகியவற்றில் பிறருக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், பணிவு, தன்னடக்கம், தூய்மை அவர்களிடத்தில் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும், மார்க்கப் பணிகளில் மூழ்க வேண்டும் என்பதே இதன் நோக்காகும்.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 394)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இந்த ஆண்டு மாநாடு உலகத் திருவிழாக்களைப் போன்றது அல்ல. மாறாக, இது நல்லெண்ணம் மற்றும் சிறந்த விளைவுகளைச் சார்ந்ததாக இருக்கின்றது. அவ்வாறில்லை என்றால் இது பொருளற்றதாகும். எண்ணம் சரியானதாக இல்லாமலும், நல்ல கனிகள் கிடைக்காமல் இருந்தாலும் எந்த நோக்கத்திற்காக ஆண்டு மாநாடுகள் நடத்தப்பட்டதோ அது கிடைக்காமல் இருந்தாலும் இது பொருளற்றதாக இருக்கிறது. பிறகு இதனால் எந்த பயனுமில்லை.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 395)

மீண்டும் மீண்டும் சந்திப்பதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அன்னார் கூறினார்கள் என்றால் அது யாரை சந்தித்தல் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைச் சந்தித்தல் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய காலத்தில் சிலர் தமது ஏதேனும் பலவீனங்களின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கோபத்திற்கு ஆளானார்கள் என்றால் எண்ணிக்கையின் அடிப்படையில் இப்போது எத்தனை பேர் அந்த வட்டத்திற்குள் வருவார்கள் என்பதை அல்லாஹ்வே நன்கறிகின்றான்.

எனவே இந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எதிர்பார்க்கின்ற தரம் இல்லையென்றால் பிறகு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு உரிமை படைத்தவர்களாகவும் நாம் இல்லை. அல்லது அந்த உரிமை உடையவர்களாக நாம் இருக்கின்றோமா? இல்லையா? என்று நாம் பார்க்க வேண்டும்.

பிறப்பால் அஹ்மதிகள் ஆவோம். அல்லது பைஅத் செய்து பல வருடங்கள் ஆகி விட்டது அல்லது சான்றோர் மூதாதையர்களின் சந்ததிகள் என்கின்ற அடிப்படையில் கலந்து கொள்கிறோம் என்று கூறினால் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எதிர்பார்க்கின்ற நோக்கத்தைப் நிறைவேற்ற முடியாது. அந்த

நோக்கத்தை அடைவதற்கு நம்முடைய அனைத்துத் திறமைகளையும் பயன்படுத்தி முயற்சி செய்கிறோம். அல்லது முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லையென்றால் பிறகு ஆண்டு மாநாட்டிற்கு வருவது திருவிழாக்களில் கலந்து கொள்வதைப் போன்றதே ஆகும். இந்த விஷயத்தின் மூலமாக பற்று கொண்ட ஒவ்வோர் அஹ்மதியின் உள்ளத்தில் ஒரு கவலை ஏற்பட வேண்டும்.

இப்போது ஒவ்வோர் ஆண்டும் உலகின் பல்வேறு நாடுகளில் ஆண்டு மாநாடுகள் நடக்கின்றன. சிலவற்றில் நான் நேரடியாகக் கலந்து கொள்கின்றேன். சிலவற்றில் M.T.A வின் மூலமாக கலந்து கொள்கிறேன். ஐரோப்பாவின் சில ஆண்டு மாநாடுகளில் உங்களில் பெரும்பாலார் கலந்து கொள்கின்றனர். பல ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களே இப்போது என் முன் இருக்கின்றனர். U.K வின் ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டிலும் பெரும்பாலார் கலந்து கொண்டு இங்கு வந்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும், மாநாட்டின் நோக்கங்கள் மற்றும் மார்க்க அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றம் பற்றிய விஷயங்கள் பேசப்படுகின்றன. சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு குறிப்பான சூழல் நிலவியது. ஆன்மீகத்தின் காட்சிகளை நாங்கள் கண்டோம் எனவும் அதிக அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் காட்சிகளை நாங்கள் கண்டோம் என்றும் பலரும் எனக்கு எழுதுகின்றனர். மேலும் நாங்கள் எங்களோடு சில விருந்தினர்களையும் அழைத்துச் சென்றோம். அவர்களும் இந்தச் சூழலைக் கண்டு நல்ல தாக்கத்திற்கு ஆளாகினர் எனவும் எழுதுகின்றனர்.

இதன் காரணமாக மேலும் ஒரு வருடத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் காரணமாக நமது நிலைமைகளில் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். உங்களுடைய நிலைமைகளில் தூய மாற்றம் ஏற்பட்டு மறுமையின் பயணம் வெறுக்கத்தக்கதாக இருக்கக் கூடாது. மேலும் அல்லாஹ் மற்றும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கம் குறிப்பான கவனம் ஏற்பட வேண்டும் என்பதற்காக வருடத்தில் ஒருமுறை ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய காலம் எங்கிருக்கின்றது? இப்போது நிலைமை என்னவென்றால் சிலர் வருடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலைமையில் நம்மிடத்தில் எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும். இப்போதும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள்தான் எடுத்துரைக்கப்படுகின்றன. அன்னாரது சொற்பொழிவுகள்தான் எடுத்துரைக்கப்படுகின்றன. அதைவிட மேலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சொற்களும், விஷயங்களும் பல்வேறு சொற்பொழிவில் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும் அல்லாஹ்வின் வசனங்களுக்கு விளக்கங்கள் கூறப்படுகின்றன.

எனவே மனிதன் எண்ணினால் நல்லெண்ணம் இருக்குமென்றால் இன்றும் கூட தூய மாற்றத்திற்கான வாய்ப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. காலத்தின் கலீஃபா உங்களிடம் ஏதேனும் கூறுகிறார் என்றாலும் அதுவும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரதிநிதியாகவே கூறுகின்றார். கிலாஃபத் தொடரும் என்றும் அதோடு ஒன்றிணைந்து அன்னார் (அலை) அவர்களின் பரக்கத்தின் தொடர் நிலைபெறும் என்ற நற்செய்தியையும் இறைவன் புறமிருந்து பெற்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தானே கூறினார்கள்.

இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அந்த அருட்கள் தொடரும் என்ற வாக்குறுதி உங்களோடு இருப்பதாகும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். அதாவது கிலஃபத்தின் அருள். எனவே இந்த சந்தர்பத்திலிருந்து பயனடைந்தவாறு இன்று இக்கருத்தின் அடிப்படையில் நான் M.T.A கேட்பதன் பக்கம் கவனமூட்டுகிறேன்.

பாகிஸ்தானில் ஆண்டு மாநாடு நடத்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் அங்குள்ள மக்கள் இழப்பிற்குரியவர்களாக இருக்கின்ற வேளையில் M.T.A–ல் குறைந்த பட்சம் தொடர்ந்து குத்பாக்களை கேளுங்கள்; பாருங்கள். ஆண்டு மாநாட்டைப் பாருங்கள். பிறகு அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யுங்கள். இதுவும் அல்லாஹ் திறந்து கொடுத்துள்ள ஒரு வழியாகும். ஓரளவுக்கு இதன் மூலம் இழப்பைக் குறைத்துக் கொள்ளலாம். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை M.T.A–ல் பார்த்தும் கேட்டும் அதிலிருந்து பயனடைவதற்கு முயற்சி செய்தால் **60,70** சதவீதம் இழப்பு குறையும். விரும்பினால் **100** சதவிகிதம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஆனால் ஐரோப்பாவிற்கு வந்துள்ள உங்களுக்கு நான் கூறுவது நீங்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றீர்கள். மேலும் சிலர் ஒன்றிற்கும் மேற்பட்ட ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இங்கு வரக்கூடிய அஹ்மதிகளுக்கு நான் ஏற்கனவே கூறியது போன்று தங்களது நிலைமைகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப உலகைத் தமக்குச் சேவை செய்வதாக ஆக்கி ஒரு தூய மாற்றத்தை உருவாக்குபவர்களாக ஆகும்போதுதான் அல்லாஹ் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த பயிற்சிப் பட்டறையிலிருந்து பலன் கிடைக்கும். இங்கு வந்து ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கேட்டு நாம் அதன்படி செயல்பட்டு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தில் கேட்கும்போதுதான் பலன் கிடைக்கும்.

ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கேட்க வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

அனைவரும் கவனமாகக் கேட்க வேண்டும். முழுமையாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏனென்றால் இது ஈமானின் விஷயமாகும்.

இது ஈமானின் விஷயமாகும் என்று அன்னார் கூறியிருப்பது இது சாதாரண விஷயமல்ல. மற்றும் சாதாரண வாக்கியமுமல்ல. மாறாக, சிந்திக்க வேண்டிய வாக்கியமாகும். ஏனென்றால் இந்த விஷயம் ஈமான் சார்ந்ததாகும். இதில் சோம்பேறித்தனம், கவனமின்மை தீய விளைவை ஏற்படுத்துகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர்கள் ஈமானில் கவனமின்மையாக இருக்கின்றார்களோ அவர்களைப் பார்த்து ஏதேனும் கூறப்படும் போது கவனத்துடன் கேட்பதில்லையோ அப்படிப்பட்டவர்களுக்கு பேசக்கூடியவர் எவ்வளவு உயர்தரமான, பயனளிக்கக்கூடிய, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயத்தைக் கூறினாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது. இப்படிப்பட்ட மக்கள் தொடர்பாகத்தான் அவர்கள் காதுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் கேட்பதில்லை. உள்ளம் உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் புரிவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. எனவே நினைவில் கொள்ளுங்கள். எது கூறப்படுகின்றதோ அதைக் கவனத்தோடும்

ஆழ்ந்த கவனத்தோடும் கேளுங்கள். ஏனென்றால், எவர் கவனத்துடன் கேட்பதில்லையோ அவர் நீண்ட காலம் பயனளிக்கக்கூடிய ஒருவருடன் இருந்தாலும் அவருக்கு எந்தவொரு பயனும் ஏற்படாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 142,143 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே எவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு ஆண்டு மாநாட்டிலிருந்து பலன் பெறுவதில்லையோ அவர்கள் தொடர்பாக அன்னார் எச்சரித்துள்ளார்கள். நாரே தக்பீர் என்று உரக்க முழக்கமிடுகின்றனர். ஆனால் அல்லாஹ்வின் நாமத்தை உரக்கக் கூறுவதும் முழக்கமும் சில நொடிகளில் உள்ளத்தை விட்டும், மூளையை விட்டும் மறைந்து விடுகின்றது. அவர்களுக்கு ஆண்டு மாநாடு எந்தப் பலனையும் தருவதில்லை என்று யாரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருக்கின்றார்களோ அவர்களில் நாமும் இருக்கின்றோமோ என்று ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி ஆராய வேண்டும்.

எனவே இங்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளீர்கள் என்றால் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் ஆண்டு மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள வேண்டும். பொறுமையோடு இருந்து அனைத்துச் சொற்பொழிவையும் கேட்க வேண்டும். மேலும் கூறப்படுகின்ற விஷயங்களிலிருந்து அறிவு மற்றும் செயல் அடிப்படை பலன் பெற வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சொற்பொழிவுகளைக் கேட்பதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: அனைவரும் கவனமாகக் கேளுங்கள். நான் எனது ஜமாஅத்திற்கும், எனக்கும், எனது ஆன்மாவிற்கும் கூட விரும்புவது என்னவென்றால் சொற்பொழிவுகளில் வெளிப்படையான வரட்டுப் பேச்சுக்கள் மட்டும் இருக்கக் கூடாது.

பேசக்கூடியவர் எவ்வளவு வசீகரமான சொற்பொழிவை நிகழ்த்துகின்றார். சொற்களில் எந்த அளவுக்கு அழுத்தம் இருக்கிறது என்பதில் மட்டும் திருப்தியடைந்து விடக்கூடாது. அதை நான் விரும்பவில்லை. செயற்கையாகவோ அல்லது பகட்டாகவோ அல்லாமல் என்னுடைய இயல்பு விரும்புவதெல்லாம் எந்தப் பணியாக இருந்தாலும் அது அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். எந்த விஷயமாக இருந்தாலும் அது இறைவனுக்காக இருக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 398,399 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்களில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு மிகப் பெரிய காரணம் இதுவும் ஆகும். அவ்வாறில்லாமல் இருந்திருந்தால் இந்த அளவுக்கு கருத்தரங்கங்களும், கூட்டங்களும், சபைகளும் நடத்தப்பட்டும் அங்கு பெரும் பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டும் எந்தவொரு தாக்கமும் ஏற்படுவதில்லை. சமுதாயம் நாளுக்கு நாள் முன்னேற்றத்தின் பக்கம் செல்வதற்குப் பகரமாக வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்றால், அந்த சபைகளுக்கு வருபவர்கள் பற்றுடன் வருவதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 401 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

வெறும் வெளிப்படையான பேச்சுக்களிலிருந்தும், சொற்பொழிவாளர்களின் சொற்களிலிருந்தும் கேட்பவர்கள் இன்பம் அடைகின்றனர். அவர்களிடத்தில் கலப்பற்ற தன்மை இருப்பதில்லை.

அன்னாரின் இயல்பு இதையே விரும்பியது. மேலும் அன்னார் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடமிருந்தும் இதையே விரும்பினார்கள். அதாவது சொற்பொழிவுகள் மற்றும் சொற்பொழிவாளர்களின் உணர்ச்சி வசப்படுதலில் தற்காலிகமாகத் தாக்கத்தை பெறுபவர்களாக இருக்கக் கூடாது.

மாறாக, கருத்தின் ஆழத்தை புரிந்து வாழ்க்கையின் அங்கமாக ஆக்க வேண்டும். சொற்பொழிவுகளைக் கேட்டு விட்டு மாநாட்டுத் திடலுக்கு வெளியே வந்து அதை மறந்து விடுவது என்பது முன்னேற்றம் அல்ல.

மாறாக அது வீழ்ச்சியின் பக்கம் எடுத்துச் செல்லும் விஷயங்கள் ஆகும். மேலும் முஸ்லிம்களின் இன்றைய இழி நிலைமை மற்றும் வீழ்ச்சியின் காரணம் என்னவென்றால் பெரும் பெரும் சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவைக் கேட்கின்றனர். ஆனால் செயல்படுவதில்லை. செயல் இல்லாமைக்கு ஒப்பாக இருக்கிறது.

மாறாக, இன்னும் கூறுவதென்றால் எந்தச் சமுதாயத்தில் செயல் இருக்காதோ அது ஒருபோதும் முன்னேற்றம் அடைய முடியாது. உலகில் இன்று முஸ்லிம்களின் நிலைமை இதற்கு மிகத் தெளிவான ஒரு சான்றாகும். வெறும் பேச்சுகள் மட்டுமே உள்ளன. செயல் இல்லை. செயல் இருந்திருக்குமென்றால் இன்று இந்த நிலைமை இருந்திருக்காது.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுள்ளோம் என்றால் முஸ்லிம்களிடம் உருவாகியுள்ள பலவீனங்களைக் களைய வேண்டும் என்பதற்காகவே ஆகும். அவ்வாறில்லையென்றால் அது பயனற்றதாகும். ஒருபுறம் நாம் உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின்கீழ் கொண்டு வருவோம் என்று வாதம் செய்கின்றோம்.

ஆனால் மறுபக்கம் உலகம் நம் மீது மேலோங்குகிறது. மேலும் ஆண்டு மாநாட்டிற்கு வருவதன் மூலம் சில நண்பர்களைச் சந்திக்கலாம் என்பதற்காக மட்டும் என்றால் மேலும் ஓரளவுக்கு ஜலஸாவையும் கேட்போம் என்றால் நண்பர்களைச் சந்திப்பது நல்ல விஷயம்தான். ஆனால் இது இரண்டாம் பட்சமான பயன்களாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருக்கக் கூடிய இந்த இரண்டாம் பட்ச பயன்களும் கூட நோக்கமில்லாமல் இல்லை. மாறாக, அன்னார் கூறியதன் நோக்கம் என்னவென்றால், சகோதரத்துவ தொடர்பு மற்றும் பரஸ்பரம் அன்பு உருவாக வேண்டும். அஹ்மதிகளிடத்தில் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் பற்றிய கவனம் இருக்க வேண்டும்.

மேலும் ஜமாஅத்தின் உறுதிப்பாடு மற்றும் எல்லா இடங்களிலும் ஒற்றுமை தென்பட வேண்டும் என்பதற்கும் ஆகும். எனவே இங்கு வந்ததன் உண்மையான நோக்கத்தை உங்கள் முன் வையுங்கள். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கேட்டு அதன்படி செயல்படுங்கள். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் இந்த நோக்கத்தை அடைவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

ஆண்டு மாநாட்டின் அருள்களிலிருந்தும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களின் அருள்களிலிருந்தும் நாம் பலன் பெறுபவர்களாக இருப்போமாக. மேலும் நமது சொல்லாலும், செயலாலும் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்தைக் காட்டக் கூடியவர்களாக நாம் இருப்போமாக. உலகம் எப்போதும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் இரண்டாம் பட்சமான ஒன்றாக இருக்கட்டுமாக.

உண்மையான நோக்கம் மார்க்கமாக இருக்கட்டுமாக. அல்லாஹ்வின் திருப்தியாக இருக்கட்டுமாக. எவர் அல்லாஹ்வின் விருப்பத்தின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் உரிமையைச் செலுத்துபவராக ஆகின்றார். மேலும் அவனுடைய படைப்பினங்களின் உரிமையைச் செலுத்துபவராக ஆக முடியும்.

அமைதி, அன்பு மற்றும் நேசம் மற்றும் சகோதரத்துவத்தை உருவாக்குபவர்களாக ஆக முடியும். உலகில் இன்று இதன் தேவை அதிகமாக உள்ளது. உலகில் இருக்கக்கூடிய கூடுதல் குறைவுகளைக் களைய வேண்டுமென்றால் உலகை தனது இறைவனை அடையாளங்கண்டு கொள்வதன் பக்கம் அழைத்து வர வேண்டும். இது இன்று ஓர் அஹ்மதியின் மிகப் பெரிய பொறுப்பாகும். எனவே இந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆண்டு மாநாட்டின் அடிப்படையில் சில அமைப்பு சார்ந்த விஷயங்களையும் கூற விரும்புகின்றேன். எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஆண்டு மாநாட்டிற்காக வாங்கப்பட்டிருக்கின்ற இந்த இடத்தில் அதன் சூழலில் ஏற்பாட்டாளருக்கு எந்த கஷ்டமும் ஏற்பட வேண்டாம். வெளியில் செல்லும்போது சாலைகளில் அண்டை அயலாருக்கும் கஷ்டம் ஏற்படக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். இதை எந்நிலையிலும் உறுதி செய்ய வேண்டும்.

அஹ்மதிகள் எவ்வாறு அண்டை அயலாரையும் கருத்தில் கொள்கின்றனர், சட்டத்தைப் பேணி நடக்கின்றனர் என்பதும் இவ்வளவு அதிக எண்ணிக்கை இருந்தும் கூட எந்த குழப்பத்திற்கும் காரணமாக இல்லை என்பதும் வெளிப்படும்போதுதான் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி சரியாகத் தெரிய வரும்.

ஆண்டு மாநாட்டின் ஏற்பாட்டாளர்களும் குறிப்பாக இதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த எண்ணிக்கை சில நாடுகளின் ஆண்டு மாநாட்டை ஒப்பிடும்போது குறைவானதுதான். மாறாக, இன்னும் கூறுவதென்றால் எங்கு ஜமாஅத்துகள் அதிகம் உள்ளனவோ அங்கு சில இடங்களில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை கூட இதை விட அதிகமாக இருக்கும்.

ஆனால் இந்த நாட்டைப் பொருத்தவரை இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் இங்குள்ள ஏற்பாட்டாளர்களின் ஏற்பாடுகளின் அடிப்படையில் இது ஒரு பெரும் எண்ணிக்கையே ஆகும்.

பிறகு அசல் நோக்கமான துஆவையும் ஆண்டு மாநாட்டின் நாட்களில் கருத்தில் கொள்ளுங்கள். ஸலவாத் ஓதி வாருங்கள். இறைவனை நினைவு கூர்வதில் உங்களது நாவுகளை ஈரமாக வைத்திருங்கள். தொழுகை நேரங்களில் இங்கு தொழுகை நடந்தாலும் அல்லது மிஷன் ஹவுஸில் தொழுகை நடைபெறும் போதும் நேரத்திற்கு முன்பே வந்து விடுங்கள்.

மக்கள் தாமதமாக வருவதை நான் இரண்டு நாட்களாக பார்த்து வருகிறேன். பிறகு வேகமாக நடந்து வருகிறார்கள். இதன் காரணமாக மரப்பலகையினால் ஆன தரையின் காரணமாக இரைச்சல் ஏற்படுகிறது. அதிக ஓசை ஏற்படுகிறது. முன்னரே வந்து அமருங்கள். அப்போது தான் பிறரின் தொழுகைகளுக்கு இடையூறு ஏற்படாது.

நான் முன்பே கூறியது போன்று ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளைக் கவனமாகக் கேளுங்கள். மேலும் ஆண்டு மாநாட்டின் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும். சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும் என்பதற்காக ஆயத்தமாகிக் கொள்ளுங்கள்.

அப்போது தான் நீங்கள் உங்களது குழந்தைகளுக்கும் உங்களுடைய அடுத்த தலைமுறைக்கும் தர்பிய்யத் செய்ய முடியும். ஆண்டு மாநாட்டின் முக்கியத்துவம் என்ன? என்றும் நாம் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடத்தில் ஏற்பட முடியும்.

எனவே இதைக் குறிப்பாக கவனத்தில் கொள்ளுங்கள். ஆண்டு மாநாட்டில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விடுகிறது. சிலரிடையே பழைய பகை இருந்து வருகிறது. ஒன்று சேரும் போது அவை தலைதூக்குகின்றன. எனவே இந்தச் சூழலை இந்த அடிப்படையில் முற்றிலும் தூய்மையானதாக வைக்க வேண்டும். பிறரின் உள்ளங்கள் புண்படும் அளவுக்கு எந்த வகையான பேச்சையும் யாரும் பேசக் கூடாது.

அவ்வாறு பேசப்பட்டால் மக்களின் மீதும் அதன் தீய தாக்கம் ஏற்படுகிறது. மக்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டவாறு ஏற்பாட்டாளர்கள் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்களா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.

எவ்வாறிருப்பினும் செய்திருப்பார்கள். ஒருவேளை ஏதேனும் கூடுதல் குறைவு இருக்குமென்றால் பொறுமையின் முன்மாதிரியைக் காட்டுங்கள். இன்ஷா அல்லாஹ் ஏற்பாடுகள் செய்யப்படும். ஏற்பாட்டாளர்களுக்குச் சிறிது நேரமும் கொடுங்கள். நீண்ட ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுள்ளது எனக் கருதுகிறேன். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் எல்லா வகையிலும் ஆண்டு மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக.

நான் ஏற்கனவே கூறியது போன்று மக்கள் இந்த நாட்களில் துஆவும் செய்து வாருங்கள். தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் உங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கும் வாரிசாக்குவானாக.

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

***தொலைபேசி எண்:***

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

## ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை செய்து வாருங்கள்

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் அதாவது **3** ஆகஸ்ட் **2018** அன்று நிகழ்த்திய மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகம் அதிகமாக துரூது ஷரீஃப் துஆவையும், கீழ்க்கண்ட துஆக்களையும் ஓதி வரும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

(1) اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى آلِ إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى
إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அளவற்ற அருட்களைக் கொடுத்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

(2) رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ

பொருள்: எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். **(3:9)**

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَإِسْرَافَنَا فِيْٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. **(3:148)**

(4) رَبَّنَا ظَلَمْنَآ أَنْفُسَنَا ۜ وَإِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். **(7:24)**

(5) رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. **(2:202)**

(6) اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُ بِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: என் இறைவா! நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன் மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் அவர்களது விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(அபூதாவூது, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

(7) رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

பொருள்: எங்கள் இறைவா! அனைத்தும் உனக்குத் தொண்டு செய்பவைகளாகும். என் இறைவா! என்னைப் பாதுகாப்பாயாக. மேலும் எனக்கு உதவி செய்வாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இல்ஹாமிய துஆ)

## தேசிய இஜ்திமா 2018-ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களின் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு

அசல் விஷயம் என்னவென்றால் நமது நண்பர்களுக்கு நம்முடன் உள்ள தொடர்பு உடல் உறுப்புகளைப் போன்றதாகும்...

எவ்வாறு ஒரு தாய் தனது குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் சுகமும் வசதியும் கிடைக்க வேண்டும் என்ற கவலையில் மூழ்கி இருக்கின்றாளோ அது போன்றே எனது நிலையும் இருக்கின்றது. அந்தக் குழந்தைகள் எவ்வளவு பேர் இருந்தாலும் சரியே.

முற்றிலும் அந்தத் தாயைப் போன்றே இறைவனுக்காக உள்ளத்தில் நமது நண்பர்களுக்காக உருக்கத்தையும் துக்கத்தையும் பகிர்ந்து கொள்வதை நான் உணர்கின்றேன்...

நமது நண்பர்களில் எவராவது ஒருவரது கடிதம் எனக்கு வரும்போது அதில் அவருக்கு ஏற்படுகின்ற ஏதாவதொரு வகையிலான துன்பம் அல்லது நோய் பற்றிய நிலைமைகளை விளக்குகின்ற வகையில் அது இருக்கின்றது. அதைப் படித்துப் பார்க்கும்போது நமது இயல்பில் ஒரு நிம்மதியற்ற பதற்றமான நிலைமை உருவாகின்றது. ஒரு துக்கம் நமக்கு ஏற்படுகின்றது.

இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக அதே அளவில் இந்த துக்கமும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இது போன்ற எந்த வகையிலான கவலையும் துக்கமும் இல்லாத எந்தவொரு நேரமும் இருப்பதில்லை.

எந்த அளவு அதிகமாக நேரங்கள் இந்த துக்கத்தில் கழிகின்றன என்பதை என்னால் கூற முடியாது. ஏனென்றால், அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் அத்தகைய துன்பங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் நமக்கு இரட்சிப்பை வழங்க முடியாது.

எனவே நான் எப்போதும் துஆக்கள் செய்வதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றேன். இறைவன் எனது நண்பர்களை எல்லா விதமான துக்கங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதே எல்லாவற்றையும் விட முதன்மையான துஆவாக இருக்கின்றது.

ஏனென்றால், அவர்களைப் பற்றிய கவலையும் துக்கமும் தான் என்னை துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்தி விடுகின்றது... அவர்களில் எவருக்காவது எந்தவொரு துக்கமும் துயரமும் ஏற்பட்டாலும் அல்லாஹ் அதிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பை வழங்க வேண்டும் என்று துஆ செய்யப்படுகின்றது.

எனது முழு பணியும், முழு உணர்வும் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்வதற்காகவே இருக்கின்றது. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பான பெரும் பெரும் நம்பிக்கையும் ஏற்படுகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 66 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

## நமது கொள்கை

"நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் காஃபிர் அல்லன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஆவான் என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி வலாகிர் ரஸூலல்லாஹி வ காத்தமன் நபிய்யீன் (அவர்கள் நபிமார்களுக்கு முத்திரை ஆவார்) என்பது எனது ஈமான் ஆகும்.

நான் எனது இந்த வாக்குமூலத்தின் உண்மைக்குச் சான்றாக இறைவனுக்கு எத்தனை தூய பெயர்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு திருக்குர்ஆனில் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேன்மைகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதிராக எனது எந்தக் கொள்கையும் இல்லை. எவர் இவ்வாறு கருதுகிறாரோ அது அவருடைய சொந்த தவறான எண்ணமாகும். எவர் இப்போதும் என்னை காஃபிர் எனக் கருதுகிறாரோ, காஃபிர் எனக் கூறுவதிலிருந்து விலக மாட்டாரோ அவர் மரணத்திற்குப் பிறகு கேள்வி கேட்கப்படுவார் என உறுதியாக நினைவில் கொள்ளட்டும்.

இறைவன் மீதும், இறைதூதர் மீதும் எல்லா மக்களுக்கும் இருக்கும் ஈமான்களை தராசின் ஒரு தட்டிலும், எனது ஈமானை இன்னொரு தட்டிலும் வைத்தால் அல்லாஹ்வின் அருளால் எனது இந்த தட்டு தான் அதிக எடையுள்ளதாக இருக்கும் என நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்."

(கராமாத்துஸ் ஸாதிகீன் பக்கம் 25 ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)

## வக்ஃபே நவ் பெற்றோர்களின் கடமை

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)

"வக்ஃபே நவ் பிள்ளைகள் உலகின் தாழ்மையான அடியாராக எப்போதும் தம்மைக் கருத வேண்டும். வக்ஃபே நவ் பிள்ளைகள் எங்கு தமது தியாகத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமோ அங்கு தமது இறை வணக்கத்தின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தமது நன்றியுணர்வின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும்.

தமது பெற்றோர்களின் உடன்படிக்கையை நிறைவேற்ற தமது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்திற்காக அதனைப் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்தின் வெற்றிக்காகப் பணி செய்ய முயற்சி செய்ய வேண்டும். அந்நிலையில் அல்லாஹ்வும் அருள் செய்கின்றான். கூலியின்றி வெறும் கையுடன் எவரையும் இறைவன் அனுப்புவதில்லை."

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

மேலும் அவன் கூறியதாவது, நீங்கள் உங்களது வஞ்சகங்களினால் இவரை அழிக்க முடியாது. நான் அவரை மக்களுக்கு அருட்கொடையின் அடையாளமாக ஆக்குவேன். மேலும் இவ்வாறு ஆக்குவது ஆரம்பத்திலேயே முடிவு செய்யப்பட்டதாகும். ஒரு துஷ்டனான யூதப் பண்டிதன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு விரோதமாக உருவாக்கிய கோரிக்கையின் மீது யூத மார்க்க அறிஞர்கள் அவரை நிராகரிப்பாளர் என அறிவித்துத் தீர்ப்பு வழங்கினர். இவர்களில் பைத்துல் முகத்தஸிலுள்ள நூற்றுக்கணக்கான அஹ்லே ஹதீதுகளின் மார்க்க அறிஞர்கள் பலரும் இடம் பெற்றிருந்தனர். அவர்களும் ஈஸா (அலை) நிராகரிப்பாளர் என்ற தீர்ப்புக்கு ஆதரவு அளித்தனர். இதே சம்பவம் என்னோடும் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது நிராகரிப்பாளன் என்ற குஃப்ர் பத்வா அளிக்கப்பட்ட பின் அவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். பழித்துரைக்கப்பட்டார்கள். அவர்களைப் பழித்து நூல்கள்☆ எழுதப்பட்டன. இதே நிலை இங்கு எனக்கும் உண்டானது. 1800 ஆண்டுகளுக்குப் பின் அதே ஈஸா மீண்டும் பிறந்துள்ளார். அதே யூதர்கள் மீண்டும் தோன்றியுள்ளனர். அந்தோ! غَيْرِالْمَغْضُوْبِ عَلَيْهِمْ என்ற முன்னறிவிப்பிற்கு இறைவன் முன்பே அறிவித்த அதே பொருளாகும். ஆனால் இவர்கள் அந்த யூதர்களைப் போல் இறைவனின் கோபத்திற்கு இலக்காகாதவரை பொறுமையாக இருக்கவில்லை. (அதாவது இறைவனின் கோபத்திற்கு இலக்காகி யூதர்களைப் போல் ஆகி விட்டனர்).

இறைவன் இந்த ஒப்புமை என்னும் கல்லை தனது கரங்களால் நாட்டியுள்ளான். அதாவது மஸீஹ் இப்னு மர்யம் பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது போன்றே என்னையும் சரியாகப் பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாத்தின் மஸீஹாக இறைவன் அனுப்பியுள்ளான். மேலும் எனக்காகத் தனது வல்லமையான அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான். வானத்தின் கீழ் எந்தவொரு பகைவனாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும், யூத கிறிஸ்தவராக இருந்தாலும் அல்லது வேறு எவராக இருந்தாலும் அவரால் அவற்றை எதிர்த்து நிற்கும் சக்தி கிடையாது.

பலவீனமானவனும், இழிந்தவனுமான மனிதனால் இறைவனை எவ்வாறு எதிர்த்து நிற்க முடியும்? இது இறைவன் புறமிருந்து வந்த ஓர் அடிக்கல் ஆகும். எவன் இதனை உடைக்க நாடுகின்றானோ அவன் இதனை ஒருபோதும் உடைக்க முடியாது. ஆனால் இந்தக் கல் அவன் மீது விழும் போது அவனை அது துண்டு துண்டாக்கி விடும். ஏனெனில் இக்கல் இறைவனுடையதாகும். கையும் இறைவனுடையதாகும்.

எனது எதிரிகள் வேறு ஒரு கல்லை உருவாக்கி அதற்கு எதிராக வைத்தனர். அதாவது அக்காலத்தில் அந்த யூதர்கள் செய்தது போன்ற வேலையை எனக்கு எதிராக இவர்களும் செய்தனர். என்னை அழிப்பதற்காக என் மீது ஒரு கொலை வழக்கும் உருவாக்கப்பட்டது. இதைப் பற்றி முன்பே எனது இறைவன் எனக்கு அறிவித்திருந்தான்.

☆அடிக்குறிப்பு:– ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் யூதர்களில் பல பிரிவினர் இருந்த போதிலும் அவர்களுள் உண்மை வாதிகளாக நம்பப்பட்டவர்கள் இரு பிரிவினர்களாவர். இவர்களில் முதலாவது பிரிவினர் தவ்ராத் என்னும் வேதத்திற்குக் கட்டுப்பட்டவர்களாவர். இவர்கள் கவனமாய் ஆராய்ந்து அதிலிருந்து மார்க்கப் பிரச்சனைகளை நிவர்த்தி செய்து வந்தார்கள்.

இரண்டாவது பிரிவினர் ஹதீதுகளை கடைபிடிக்கக் கூடியவர்களாகிய அஹ்லே ஹதீஸ் ஆவர். இவர்கள் தவ்ராத் மீது ஹதீஸை தீர்ப்பு வழங்கக் கூடியதாக நம்பி வந்தனர். அந்த அஹ்லே ஹதீஸ் இஸ்ரவேலரின் நகரங்களில் பெருமளவில் பரவி விட்டனர். இவர்கள் பெரும்பாலும் தவ்ராத்திற்கு மாறான மற்றும் விரோதமான ஹதீஸ்களின்படி செயல்பட்டு வந்தனர்.

சில மார்க்கச் சட்டங்களாகிய வணக்கம், பொதுவான மார்க்க விஷயங்கள், செயல்களுக்கு நியாயம் வழங்கும் சட்டங்கள் இவற்றைத் தவ்ராத்திலிருந்து பெற முடியாது என்பதும், இவற்றை ஹதீதுகளிலிருந்தே அறிய முடியும் என்பதுமே இவர்களது வாதமாகும். இவர்களின் ஹதீது நூலின் பெயர் தால்மூத் ஆகும்.

இதில் ஒவ்வொரு நபியின் காலத்தின் ஹதீதுகளும் இடம் பெற்றிருந்தன. ஒரு காலம் வரை இந்த ஹதீதுகள் வாய்மொழியைக் கொண்டே ஞாபகம் செய்யப்பட்டு வந்தன. பின்னர் அவை எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டு வந்தன. இதனால் இவற்றில் சில இட்டுக் கட்டப்பட்ட ஹதீதுகளின் பகுதியும் கலந்து விட்டன.

அச்சமயத்தில் யூதர்கள் எழுபத்திரண்டு பிரிவினர்களாகப் பிரிந்து விட்டதாலும், ஒவ்வொரு பிரிவினரும் தமக்காக வெவ்வேறு ஹதீதுகளை வைத்துக் கொண்டதாலும், ஹதீதுகளின் விரிவுரையாளர்களும் தவ்ராத் மீது கவனம் செலுத்துவதைக் கைவிட்டதாலும் பெரும்பாலார் ஹதீதுகளின் மீதே செயல்பட்டு வந்தனர்.

தவ்ராத்தானது கைவிட்டதைப் போலவும், துண்டிக்கப்பட்டதைப் போலவும் ஆகிவிட்டது. ஹதீதுக்கு ஏற்ப வந்தால் ஒப்புக் கொள்வார்கள். இல்லாவிடில் அதனைத் தள்ளி விடுவார்கள். அந்தக் காலத்தில்தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றினார்கள். தவ்ராத்தை விட ஹதீதுக்கு கண்ணியம் அளித்து வந்த ஹதீதைப் பின்பற்றும் மக்களுக்கே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் குறிப்பாகப் போதிக்க வேண்டியதாயிற்று.

யூதர்கள் பல பிரிவினர்களாகப் பிரிந்து இறைவனது வேதத்தை விட்டு விட்டு இதற்கு மாறாக ஹதீதுகள் மீது செயல்பட்டு வரும் காலத்தில் நியாயம் வழங்கும் ஒரு நீதிபதி அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்றும் அவரே மஸீஹ் என்று அழைக்கப்படுவார் என்றும் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் இதனால் பெரும் ஆக்கினை அவர்கள் மீது உண்டாகும் என்றும் நபிமார்களின் ஏடுகளில் முன்பே அறிவிக்கப்பட்டு இருந்தது. அந்த ஆக்கினையே பிளேக்காகும். நவூதுபில்லாஹ் (நாம் இறைவனிடம் அடைக்கலம் தேடுகிறோம்).

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 52–54)

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 11 October 2018 Issue No. 41

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad